**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.61/2012**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செல்வராஜ் | மதம் | : இந்து |
| த/பெ | : கண்ணன் (எ) கிருஷ்ணன் | ஜாதி | : -- |
| வயது | : 71 | கிராமம் | : நகரி |
| தொழில் : | பணி ஓய்வு | வட்டம் | : நகரி |

**26.08.2025**
**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் 1ம் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 16.11.1976ம் தேதியிட்டு தயாளன் ராஜம்மாளுக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 12.05.2000ம் தேதியிட்டு கண்ணன் என்ற கிருஷ்ணன், ராஜம்மாள் மற்றும் 5ம் பிரதிவாதி கஸ்தூரி ஆகியோர் சேர்ந்து ஜெயசந்திரன் என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** ராஜம்மாளின் இறப்பு சான்று சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(இறப்பு சான்று வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

(முதல் விசாரணை தொடர்ச்சி ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)